## அரசாங்க சேவை சேமலாப நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க சேவை சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 7(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டாய பங்களிப்புப் பணத்தினைப் போல் 1.5 மடங்கு அரசாங்கத்தினால் அரசாங்கத்தின் மிகையூதியப் பணமாக நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டும். 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டாய பங்களிப்புப் பணமான ரூபா 12,954,988,371 தொகையான மீதியில் 1.5 மடங்கான ரூபா 19,432,482,557 தொகை அரசாங்கத்தின் மிகையூதியப் பணக் கணக்கில் இருக்க வேண்டிய போதிலும் அம்மீதி ரூபா 19,839,373,184 ஆனமையால் ரூபா 406,890,628 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அவ்வேறுபாடுகளை விளக்குவதற்குத் தேவையான கணக்காய்வுச் சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பங்களிப்பாளர்களுக்காகவும் தனியான கணக்குகள் பேணப்படவேண்டிய போதிலும் நிதியத்தின் ஆரம்பம் தொடக்கம் தனியான கணக்குகளைப் பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையினால் கட்டாய பங்களிப்புப் பணக் கணக்கு மீதியான ரூபா 12,954,988,371 பணத்தினை பரிசீலிக்க முடியாதிருந்தது. இதற்கு மேலதிகமாக நிதியத்திற்கு கட்டாய பங்களிப்பினைச் செலுத்துகின்றவர்கள் தொடர்பான விபரங்கள் காணப்படாமையினால் கிடைக்க வேண்டிய நிலுவை மீதியைக் கணிப்பீடு செய்ய முடியாமையின் காரணமாக

கட்டாய பங்களிப்புப் பணக் கணக்கின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஐந்தொகையில் செம்மையாக்கல் கணக்கில் ரூபா 13,823,857 தொகையான மீதி காணப்பட்டது. இந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் முன்னைய சில வருடங்களில் காணப்பட்ட மீதிகள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | மீதி |
|---|---|
| | ரூபா |
| 2009 | 5,983,197 |
| 2010 | 12,850,740 |
| 2011 | 18,326,537 |

### 1.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 621) | |
| (I) 2(2) ஆம் பிரிவு | ஒவ்வொரு பங்களிப்பாளர்களுக்காகவும் தனியான கணக்குகள் பேணப்படவேண்டிய போதிலும் நிதியத்தின் ஆரம்பம் தொடக்கம் தனியான கணக்குகள் பேணப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (II) 25 ஆம் பிரிவு | இப்பிரிவின் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டு முடிவுற்றதை அடுத்து ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் திசெம்பர் 31 ஆம் திகதியில் அங்கத்தவர்களின் கணக்குகளில் உள்ள மீதி பங்காளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 188(2) | 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் 06 மாதங்களை விஞ்சிய தேறாத ரூபா 193,720 தொகையான பெறுவனவுகள் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு பங்களிப்பாளர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட முன்னர் ரூபா 2,560,334,257 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,426,308,059 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 134,026,198 அதிகரிப்பைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வட்டி வருமானம் ரூபா 134,821,502 ஆல் அதாவது 6 சதவீதத்தால் அதிகரித்தமை மிகையின் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நிதியத்தின் செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் உள்ளபடியான அடைந்து கொள்ளல் நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | செயற்பாடுகள் | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | | | உள்ளபடியான நிலை | சதவீதம் |
| | | | | நூற்றுக்கு |
| (i) | அங்கத்தவர்களைப் பதிவுசெய்தல் | 6,000 | 3,667 | 61 |
| (ii) | பங்களிப்புத் தொகையினைச் சேகரித்தல் (ரூபா. மில்.) | 2,200 | 1,556 | 71 |
| (iii) | மேலதிகப் பணத்தை முதலீடு செய்தல் (ரூபா. மில்.) | 3,400 | 3,420 | 101 |
| (iv) | அங்கத்தவர்களுக்கு நலன்கள் கொடுப்பனவு (ரூபா. மில்.) | 500 | 484 | 97 |

## 3.2 அங்கத்தவர்களுக்கு உரித்தான வட்டி வீதம்

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் நிதியத்தினால் அங்கத்தவர்களுக்கு உரித்தாக்கப்பட்டிருந்த வட்டிவீதம் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| வட்டி வீதம் | 8.69 | 9.15 | 11.00 | 11.85 | 7.95 | 7.50 | 8.04 |

மேலே காண்பிக்கப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் வருடாந்தம் அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டிவீதத்தில் உயர்வு தாழ்வுகள் ஏற்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி வீதம் 0.46 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.

நிதிச் சந்தையில் காணப்பட்ட வட்டி வீதத்தின் உயர்வு தாழ்வுகளினால் நிதியத்தின் முதலீட்டிற்காக கிடைக்கின்ற வட்டியின் அளவும் மாறுபடுகின்றமையினால் ஒதுக்கப்பட்ட

வட்டி வீதத்திலும் ஏற்றத் தாழ்வுகள் ஏட்பட்டிருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

### 3.3 திறைசேரியிருந்து நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய பணம்

திறைசேரிச் செயலாளரினால் அறவிடப்பட வேண்டிய அரசாங்க ஊக்குவிப்புத் தொகை நிதியத்திற்குக் கிடைக்கப்பெறாது போன காரணத்தினால் அப்பணம் முதலீடு செய்யப்படுவதன் மூலம் உழைக்கப்படக் கூடியதாக இருந்த வட்டி வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 6 ஆண்டுகளிற்கும் உரித்தாக அவ்வாறு கிடைக்கப்பெறாது போயிருந்த வட்டி வருமானம் பின்வருமாறாக இருந்தது.

| ஆண்டு | திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை திசெம்பர் 31 இல் உள்ளவாறு | பெறவேண்டிய தொகை திறைசேரி முறிகளில் முதலீடு செய்யப்படுவதன் மூலம் உழைக்கக் கூடியதாக இருந்த வட்டி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2006 | 1,013,381,581 | 154,034,000 |
| 2007 | 1,451,131,498 | 206,060,673 |
| 2008 | 1,799,238,475 | 307,669,779 |
| 2009 | 1,792,715,215 | 277,870,858 |
| 2010 | 1,904,165,223 | 166,614,457 |
| 2011 | 2,147,647,821 | 186,201,066 |
| 2012 | 2,127,765,493 | 170,221,239 |
| | | 1,468,672,072 |

மேலே அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் கிட்டிய 06 வருடங்களில் மாத்திரம் நிதியத்திற்கு கிடைக்காது போயிருந்த முதலீட்டு வட்டி வருமானம் அண்ணளவாக ரூபா 1,468 மில்லியனாக இருந்தது.

## 3.4 அங்கத்தவர்களுக்கு நலன்களைச் செலுத்துதல்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் அங்கத்தவர்களினால் நலன்களைப் பெறுவதற்காக கோரப்பட்ட விண்ணப்பங்களில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 557 விண்ணப்பங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இது மொத்த எண்ணிக்கையில் 8 சதவீதமாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டினதும் முன்னைய சில ஆண்டுகளினதும் தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | ஆண்டின் போது செலுத்துவதற்கிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஆண்டின் போது செலுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஆண்டின் போது செலுத்தப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஆண்டின் போது செலுத்தப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை சதவீதமாக |
|---|---|---|---|---|
| | | | | % |
| 2006 | 1,103 | 622 | 481 | 43.6 |
| 2007 | 2,432 | 1,776 | 656 | 27.0 |
| 2008 | 4,014 | 3,289 | 725 | 18.1 |
| 2009 | 6,151 | 4,194 | 1,957 | 31.8 |
| 2010 | 9,787 | 5,882 | 3,905 | 39.9 |
| 2011 | 11,608 | 9,836 | 1,772 | 15.3 |
| 2012 | 7,402 | 6,845 | 557 | 8.0 |

## 3.5 முகாமைத்துவ திறமையீனங்கள்

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 1997 யூலை 31 ஆம் திகதிய 1/97 ஆம் இலக்க மற்றும் 2006 ஒக்தோபர் 30 ஆம் திகதிய 14/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் போதும் நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் பணம் தொடர்பான கட்டளை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிதியத்தின் செயலாளருக்கு உரிய நிறுவகத்தினால் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக இந்த அறிவித்தல் சில நிறுவகங்களில் இருந்து மாத்திரமே அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இந்த அறிவித்தலை பெற்றுக்கொள்வது தொடர்பாக நிதியம் எடுத்துள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட நிலையை எய்தி இருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அறவிடல் பதிவேடுகளைப் பெற்றுக்கொள்ளல்

(இ) பங்களிப்புப் பணத்தைப் பெற்றுக்கொள்ளல்